# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/43 - 2018 ජූනි මස 01 වැනි සිකුරාදා - 2018.06.01

*2073/43 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் அடிப்படையில் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சரின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் கீழ்த் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நவீன் திசாநாயக்க,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

*2018, யூன் 01.*

### அட்டவணை

கௌரவ ஏ. டி. சம்பிக்க பிரேமதாஸ, பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. இறப்பர்த்துறை தொடர்பிலான விடயங்களுடன் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும். | 1. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்<br>2. துருசவிய நிதியம்<br>3. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்<br>4. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் | • 1953 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம்<br>• 1930 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி சபைக் கட்டளைச் சட்டம்<br>• 1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம் |


1A – PG 4056 – 507 (2018/5)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. இறப்பர் பயிர்களின் அறுவடையை அதிகரிப்பதற்காக வேண்டிய இணைந்த ஏனைய வசதிகளை ஏற்படுத்தல். | | • 2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, துருசவிய நியதிச் சட்டம் |
| 3. இறப்பர்த் துறையில் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்காக சர்வ தேச போட்டியினை அதிகரித்தல். | | • வேறேதாயினும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாக கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. இறப்பர் பயிரின் அடிப்படையிலான சேர் பெறுமதியை அதிகரிப்பது தொடர்பான கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | |
| 5. இறப்பர் தொடர்பில் உரிமம் வழங்கல். | | |
| 6. பல் பயிர்ச்செய்கைகள், கூட்டுப் பண்ணை முறைகளினூடாக இறப்பர்த் தோட்டக் காணிகளை உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளலும், இதன் மூலமாக உற்பத்தியையும் தொழில் வாய்ப்பையும் அதிகரித்தலும். | | |
| 7. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கான கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை அறிமுகப்படுத்துதல். | | |
| 8. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற்பாடுகள். | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களை கண்காணித்தல். | | |
| 10. இறப்பர் செயலகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும். | | |

06-598

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.